**<u>சுருக்கம்</u>**

உயர்கல்வி - கல்லூரிக்கல்வி – அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இரண்டாம் சுழற்சி வகுப்புகள் துவங்கப்பட்டமை – தொகுப்பூதியத்தில் கௌரவ விரிவுரையாளர்கள் நியமனம் செய்யவும் மற்றும் ஆசிரியரல்லாப் பணியாளர்களுக்கு உழைப்பூதியம் வழங்கவும் ஒப்பளிப்பு அளித்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

உயர்கல்வி (ஜி1) துறை

அரசாணை (4D) எண்.2

நாள் 5.7.2011
ஆனி 20
திருவள்ளுவர் ஆண்டு 2042

<u>படிக்கப்பட்டவை</u>

1) அரசாணை (நிலை) எண்.380, உயர்கல்வி (ஜி.1)துறை, நாள் 30.10.2006.
2) அரசாணை (நிலை) எண்.338, உயர்கல்வி (ஜி.1)துறை, நாள் 28.9.2007.
3) அரசாணை (நிலை) எண்.391, உயர்கல்வி (ஜி.1)துறை, நாள் 23.9.2008.
4) அரசாணை (நிலை) எண்.309, உயர்கல்வி (ஜி.1)துறை, நாள் 18.8.2009.
5) அரசாணை (நிலை) எண்.113, உயர்கல்வி (ஜி.1)துறை, நாள் 28.5.2010.
6) அரசாணை (நிலை) எண்.287, உயர்கல்வி (ஜி.1)துறை, நாள் 31.8.2010.
7) கல்லூரிக் கல்வி இயக்குநரின்கடித எண்.16313/என்2/2011, நாள் 4.5.2011.
8) அரசாணை (நிலை) எண்.150, உயர்கல்வி (ஜி.1)துறை, நாள் 22.6.2011

--------

**<u>ஆணை</u>: -**

மேலே 6ல் படிக்கப்பட்ட அரசாணையில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இரண்டாம் சுழற்சி முறை வகுப்புகளை கையாள்வதற்கு 2010–11ம் கல்வி ஆண்டிற்கு, 1661 கௌரவ விரிவுரையாளர்களை 12.7.2010 முதல் நியமிக்கவும், இக்கௌரவ விரிவுரையாளர்களுக்கு தொகுப்பூதியமாக மாதம் ரூ.6000/- (ரூபாய் ஆராயிரம் மட்டும்) வழங்கவும் மற்றும் ஆசிரியரல்லாப் பணியாளர்களுக்கு உழைப்பூதியம் வழங்கவும் நிதி ஒதுக்கீடு ரூ.10,29,10,800/– (ரூபாய் பத்து கோடியே இருபத்து ஒன்பது இலட்சத்து பத்தாயிரத்து எண்ணூறு மட்டும்) அனுமதித்தும் அரசு ஆணை வழங்கியுள்ளது.

2. கல்லூரிக் கல்வி இயக்குநர் மேலே 7ல் படிக்கப்பட்ட கடிதத்தில் கல்லூரிகள் கோடை விடுமுறைக்கு பின் திறக்கப்பட உள்ளமையால் சென்ற ஆண்டைப்போலவே இந்த கல்வியாண்டிற்கு (2011–2012ம் ஆண்டிற்கு) 1661 கௌரவ விரிவுரையாளர்களை 59 அரசு கல்லூரிகளுக்கு சுழற்சி இரண்டு பாடப்பிரிவுகளை நடத்த, தொகுப்பூதியம் ரூ.6000/– அடிப்படையில் பணி அமர்த்திக் கொள்ள அனுமதியும் இதற்கென ரூ.9.966 கோடி நிதி ஒதுக்கீடும் வழங்குமாறும் மேலும் இதே போன்று ஆசிரியரல்லா பணியாளர்களுக்கு ரூ.32,50,800/– நிதியொதுக்கீடும் வழங்குமாறு அரசைக் கோரியுள்ளார்.

..2..

3. மேலே பத்தி 2ல் உள்ள கல்லூரிக் கல்வி இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமாக பரிசீலனை செய்தது. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இரண்டாம் சுழற்சி முறை வகுப்புகளை கையாள்வதற்கு 2011–12ஆம் ஆண்டிற்கு 1661 கௌரவ விரிவுரையாளர்களை நியமிக்க சென்ற (2010–11) ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகளையே பின்பற்றி புதிதாக நியமனம் செய்யவும், இக்கௌரவ விரிவுரையாளர்களுக்கு தொகுப்பூதியமாக மாதம் ஒன்றிற்கு ரூ.6000/– (ரூபாய் ஆறாயிரம் மட்டும்) வீதம் பத்து மாதங்களுக்கு வழங்கிட ரூ.9.966 கோடி (ரூபாய் ஒன்பது கோடியே தொண்ணூற்று ஆறு இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு செய்தும் மற்றும் ஆசிரியரல்லாப் பணியாளர்களுக்கு உழைப்பூதியம் வழங்கிட ரூ.32,50,800/– (ரூபாய் முப்பத்து இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரத்து எண்ணூறு மட்டும்) ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது.

4. மேற்கண்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளில் பற்று வைக்கப்பட வேண்டும்:-

<u>ஆடவர் கல்லூரிக்கான செலவினக் கணக்குத் தலைப்பு</u>

2202 – பொதுக்கல்வி -03 பல்கலைக் கழக கல்வியும் உயர்கல்வியும் 103 அரசுக் கல்லூரிகளும் கல்வி நிறுவனங்களும் - I. திட்டத்தில் சேராதது. AA. கலைக்கல்லூரிகள் (ஆடவர்) - 33 தொழில்முறை சிறப்பு பணிகளுக்குத் தொகை கொடுத்தல் – 02 ஊதியம் (து.தொ.கு.2202 03 103 AA 3320) – [ரூ.6,74,40,000/–]

<u>மகளிர் கல்லூரிக்கான செலவினக் கணக்குத் தலைப்பு</u>

2202 – பொதுக்கல்வி -03 பல்கலைக் கழக கல்வியும் உயர்கல்வியும் 103 அரசுக் கல்லூரிகளும் கல்வி நிறுவனங்களும் - I. திட்டத்தில் சேராதது. AB. கலைக்கல்லூரிகள் (மகளிர்) – 33 தொழில்முறை சிறப்பு பணிகளுக்கு தொகை கொடுத்தல் – 02 ஊதியம்.
(து.தொ.கு.2202 03 103 AB 3328) , [ரூ.3,22,20,000/–]

<u>ஆசிரியரல்லாப் பணியாளர்களுக்கு செலவினக் கணக்குத் தலைப்பு</u>

2202 – பொதுக்கல்வி -03 பல்கலைக் கழக கல்வியும் உயர்கல்வியும் 103 அரசுக் கல்லூரிகளும் கல்வி நிறுவனங்களும் - I. திட்டத்தில் சேராதது. AA. கலைக்கல்லூரிகள் (ஆடவர்) – 01 சம்பளங்கள்
(து.தொ.கு..2202–03–103–AA 0118) [ரூ.22,30,200/–]

2202 – பொதுக்கல்வி -03 பல்கலைக் கழக கல்வியும் உயர்கல்வியும் 103 அரசுக் கல்லூரிகளும் கல்வி நிறுவனங்களும் - I. திட்டத்தில் சேராதது. AB. கலைக்கல்லூரிகள் (மகளிர்) – 01 சம்பளங்கள்
(து.தொ.கு..2202–03–103–AB 0116) [ரூ.10,20,600/–]

5. மேலே பத்தி 3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினத்திற்கு 2011–12 வரவு செலவு திட்டத்தில் ரூ.507.95 இலட்சம் கௌரவ விரிவுரையாளர்களுக்கு மதிப்பூதியம் வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் ரூ.49.83 இலட்சம் ஏற்கனவே 2010ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 நாட்கள் பணிபுரிந்த கௌரவ விரிவுரையாளர்களுக்கு மேலே 8ல் படிக்கப்பட்ட அரசாணையில் ஒப்பளிப்பு

செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் ரூ.538.48 இலட்சம் செலவினத்தை மேற்கொள்ள தேவையான நிதி 2011-2012ம் ஆண்டு திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அத்தகைய நிதி கிடைக்கும் வரையில் அனுமதிக்கப்பட்ட தொகையைப் பெற்று வழங்க கல்லூரிக்கல்வி இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. இருப்பினும், மேற்கண்ட செலவினத்திற்கு 2011-2012-ம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இச்செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2011-2012–ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கை / திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய நேரத்தில் நிதித் (கல்வி I /வ.செ.பொது.I) துறைக்கு தவறாமல் அனுப்பி வைக்கும்படி கல்லூரிக்கல்வி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.164/DS(KM)/11, நாள் 5.7.11 மற்றும் கூடுதல் நிதியொதுக்க பேரேடு எண்.214 [இருநூற்று பதிநான்கு]ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ரா.கண்ணன்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
கல்லூரிக்கல்வி இயக்குநர், சென்னை–6.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை –1/5/35 மற்றும் மதுரை.
மாநிலக் கணக்காயர், சென்னை–35.
தொடர்புடைய சார்நிலைக் கருவூல அலுவலர்கள்.
நிதித்துறை (கல்வி.1 / வ.செ.பொது.I/வ.செ.பொது.II), சென்னை–9.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

அரசு சார்புச் செயலாளர்